செ.வெ.எண். 7 நாள். 5.1.2012

**நாமக்கல் மாவட்ட ஆட்சியரகத்தில் நாமக்கல் மாவட்ட 6 சட்டப்பேரவை தொகுதிகளுக்கான புகைப்படத்துடன் கூடிய் இறுதி வாக்காளர் பட்டியலை (துணைப்பட்டியல் 4) மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.ஜெ.குமரகுருபரன் இ.ஆ.ப., அவர்கள் இன்று 5.1.2012 வெளியிட்டார்.**

நாமக்கல் மாவட்ட ஆட்சியரகத்தில் நாமக்கல் மாவட்ட 6 சட்டப்பேரவை தொகுதிகளுக்கான புகைப்படத்துடன் கூடிய இறுதி வாக்காளர் பட்டியலை (துணைப்பட்டியல் 4) மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.ஜெ.குமரகுருபரன் இ.ஆ.ப., அவர்கள் இன்று 5.1.2012 வெளியிட்டு தெரிவித்ததாவது: 1.1.2012 தகுதி நாளாகக் கொண்டு 24.10.2011 முதல் 11.11.2011 வரை சிறப்பு சுறுக்க முறை திருத்தத்திற்காக புதிதாக பெயர் சேர்ப்பதற்காக படிவம் 6 பெயர் நீக்குவதற்காக படிவம் 7 ஆகியவைகள் பொதுமக்களிடமிருந்து பெறப்பட்டன. இவ்விண்ணப்பங்கள் வாக்குச்சாவடி நிலை அலுவலர்களால் கள விசாரணை செய்யப்பட்டது. புதிதாக பெயர் சேர்த்தலுக்காக படிவம் 6, 77,374 நபர்களிடமிருந்து பெறப்பட்டது. இதில் தகுதியான 65,144 நபர்கள் புதிய வாக்காளர்களாக வாக்காளர் பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ளனர். மேலும் 13,673 வாக்காளர்கள் வாக்காளர் பட்டியலிலிருந்து நீக்கப்பட்டுள்ளனர். இதரர் வகுப்பில் (Transgender) புதிதாக 26 நபர்கள் வாக்காளர் பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ளனர். 25.1.2012 அன்று தேசிய வாக்காளர் தினம் கொண்டாடப்படவுள்ளது. புதிய வாக்காளர்களுக்கு வாக்காளர் அடையாள அட்டை தேசிய வாக்காளர் தினத்திற்கு முன்னதாக வழங்கப்பட்டுவிடும். இறுதி வாக்காளர் பட்டியலில் இராசிபுரம் சட்டப்பேரவை தொகுதியில் 2,03,004 வாக்காளர்கள் உள்ளனர். இதில் ஆண்கள் 1,01,344, பெண்கள் 1,01,660 சேந்தமங்கலம் சட்டப்பேரவை தொகுதியில் 2,10,069 வாக்காளர்கள் உள்ளனர். இதில் ஆண்கள் 1,04,618 பெண்கள் 1,05,451, நாமக்கல் சட்டமன்ற தொகுதியில் 2,20,361 வாக்காளர்கள் உள்ளனர். இதில் ஆண்கள் 1,08,833 பெண்கள் 1,11,512 இதரர் 16, பரமத்தி வேலூர் சட்டமன்ற தொகுதியில் 1,94,977 வாக்காளர்கள் உள்ளனர். இதில் ஆண்கள் 95,885 பெண்கள் 99,091 இதரர் 1, திருச்செங்கோடு சட்டமன்ற தொகுதியில் 1,92,462 வாக்காளர்கள் உள்ளனர். இதில் ஆண்கள் 95,938 பெண்கள் 96,513 இதரர் 11, குமாரபாளையம் சட்டமன்ற தொகுதியில் 2,01,207 வாக்காளர்கள் உள்ளனர். இதில் ஆண்கள் 1,00,723, பெண்கள் 1,00,482, இதரர் 2. நாமக்கல் மாவட்டத்தில் உள்ள 6 சட்டப்பேரவை தொகுதியில் இறுதி வாக்காளர் பட்டியலில் 12,22,080 பேர்கள் வாக்காளர்களாக உள்ளனர். இதில் ஆண்கள் 6,07,341 பெண்கள் 6,14,709 இதரர் 30, இன்று வெளியிடப்பட்ட வாக்காளர் பட்டியல் வருவாய் கோட்டாட்சியர் அலுவலகங்கள் வட்டாட்சியர் அலுவலகங்கள் மற்றும் நிர்ணயிக்கப்பட்ட அமைவிடங்களான வாக்குச்சாவடிகளில் பொதுமக்கள் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளது. பொதுமக்கள் வாக்காளர் இறுதி பட்டியலில் தங்கள் பெயர் இடம்பெற்றுள்ளதை உறுதி செய்து கொள்ளலாம் என மாவடட ஆட்சித்தலைவர் திரு.ஜெ.குமரகுருபரன் இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்தார்.

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், நாமக்கல்.